**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | சித்திரக்கலை | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி – I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 11) | 2 | 21) | 3 | 31) | 2 |
| 2) | 3 | 12) | 4 | 22) | 1 | 32) | 2 |
| 3) | 2 | 13) | 4 | 23) | 4 | 33) | 1 |
| 4) | 2 | 14) | 5 | 24) | 4 | 34) | 3 |
| 5) | 5 | 15) | 1 | 25) | 5 | 35) | 3 |
| 6) | 3 | 16) | 3 | 26) | 4 | 36) | 3 |
| 7) | 2 | 17) | 2 | 27) | 2 | 37) | 2 |
| 8) | 4 | 18) | 3 | 28) | 2 | 38) | 1 |
| 9) | 4 | 19) | 4 | 29) | 3 | 39) | 3 |
| 10) | 3 | 20) | 4 | 30) | 1 | 40) | 4 |

**ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் 1x40 =40**

## பகுதி II

**வினா 1**

i) 1) மகாமாயா தேவி கண்ட கனவு. 2. வயல் உழுதல். 3. சித்தார்த்தர் கல்வி பயிலுதல். 4. சுஜாதா பாற்சோறு தானம் வழங்குதல். 5. புத்தராகுதல். 6. சொத்திப் பிராமணர் புல் வழங்குதல். 7. இறை பதம் அடைதல். (02 புள்ளிகள்)

ii)

- முருகக்கடவுள் சூரனை வதம் செயும் காட்சி டெம்பரா முறையில் வரையப்பட்டுள்ளது.
- முருகனின் சாந்த இயல்பும் சூரனின் அகங்கார உணர்வும் காட்டப்பட்டுள்ளது.
- இந்நிய ஓவியரான நாரயணசாமியால் வரையப்பட்டது. மேற்கத்தேய கலை மரபைத் தழுவி வர்ணங்கள் உபயோகிக்கப்பட்டு முப்பரிமாணத் தன்மை. ஆழம் எனும் பண்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.
- கீழைத்தேய மரபுக்கமைய கதை கூறும் பண்புடன் இவ்வோவியம் தீட்டப்பட்டுள்ளதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.
- இரேகைகளை விட வர்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முப்பரிமாணத் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தூர நோக்கு பண்புகளுடன் ஆழத்தை காட்டவும் முனைந்துள்ளார். (05 புள்ளிகள்)

iii)

- இரு ஓவியர்களும் சித்தார்தத்தரின் திருமணக் காட்சியை சுவரோவியங்களாக வரைந்துள்ளனர்.
- சோமபந்து வித்தியாபதியில் ஓவியத்தில் கீழைத்தேய மரபின் செல்வாக்கு காணப்படுகின்றது. M. சார்ரிலிசின் ஓவியத்தில் மேலைத்தேய ஓவியப்பண்புகள் காணப்படுகிறது.
- சோமபந்து வித்தியாபதியில் ஓவியத்தில் இளவரசன் சித்தார்த்தன் யயோசதரா தேவிக்கு மோதிரம் அணிவிப்பதாக சித்தரிக்கப்படுகிறது.
- ஆ. சார்லிசிஸ் ஓவியத்தில் சித்தார்தருக்கு, யசோதா தேவிக்கு பிராமணர் நீர் ஊற்றி திருமணத்தை நிறைவேற்றுவது போன்று காட்டப்பட்டுள்ளது. இதில் ஓவிய நுட்பமுறை ஐரோப்பிய முறையில் அமைந்திருந்துள்ளது. உருவங்களின் ஆடையமைப்பு கீழைத்தேய மரபைக் காட்டுகிறது. (08 புள்ளிகள்)

**வினா 2**

i) மனிதனும் குதிரைத்தலையும், நீரில் விளையாடும் யானைகள் (02 புள்ளிகள்)

ii)
- மனிதனும் குதிரைத்தலையும் நீரில் விளையாடும் யானைகள் சிற்பங்கள் பல்வகை கலைமரபை காட்டுகிறது.
- இது கி.பி 7 நூற்றாண்டிற்குரியது
- இவை இந்தியாவின் மாமல்லபுர பல்லவ சிற்பங்களை ஒத்துள்ளது
- நீரை தொடர்புபடுத்தி சிற்பம் (குளங்கள் ஆறுகள்) செய்யுட் பல்லவ பண்பு பேணப்பட்டுள்ளது (நீரில் விளையாடும் யானைகள்)
- பல்லவ இலக்கியத்தில் குறிப்பிடப்படும் நீரும் நெருப்பும் (கோடைஇ மாரி / வெயில், மழை) என்ற எண்ணக்கரு சிற்பமாக்கப்பட்டுள்ளது (மனிதனும் குதிரைத் தலையும்)
- நெட்டையான மனித உடல் அமைப்பு (05 புள்ளிகள்)

iii)
- றம்மசு பூங்காவில் இருந்து பெறப்பட்ட சிலை காதலர் சிலையாகும் (02 புள்ளிகள்)
- இதில் காதலர்களுக்குரிய அம்சம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது
- சாலிய குமாரன் அசோகா மாலா ஆகியோரில் காதல் பிணைப்பை வெளிப்படுத்துகிறது என டாக்டர் பரண விதான குறிப்பிடுகின்றார்
- ஆணின் மடியில் பெண் அமர்ந்திருப்பது போல செய்யப்பட்டுள்ளது
- பெண்ணின் உடலில் நளினமும் முகத்தில் வெட்கமும் காட்டப்பட்டுள்ளது
- இதில் காணப்படும் ஆண் உருவம் அன்பாக பெண்ணை அனைத்திருப்பது போல் காட்டப்பட்டுள்ளது. (08 புள்ளிகள்)

**வினா 3**

i) திவங்க ஆலயம், இலங்காதிலக ஆலயம், தூபராமை ஆலயம். (02 புள்ளிகள்)

ii) சிவனாலயம் இல. 2
- பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த மிகப் பழமை வாய்ந்த இந்து மதக் கட்டட நிர்மாணிப்பாகும்.
- இராஜ இராஜ சோழனால் தனது மனைவியின் ஞாபகார்த்தமாக கி.பி 11 இல் இது கட்டப்பட்டது.
- சிதைவடையாமல் இன்று வரை இது காணப்படுகிறது. இக்கட்டடம் முற்று முழுதாக வெட்டப்பட்ட கருங்கல்லால் உருவாக்கப்பட்ட சிறிய ஆலயமாகும்.
- தென் இந்திய சோழ கட்டட நிர்மாணிப்புப் பாணியைக் கொண்டது.
- கட்டடக் கலையின் சிறப்பியல்புகள்.
    - கூரான முகப்பைக் கொண்ட யன்னல்கள்.
    - வெளித்தள்ளியவாறு அமைக்கப்பட்ட தூண்கள் தெய்வ உருவங்களுடனான விமானங்கள்.
    - போதிகை அலங்காரங்களைக் கொண்ட மணியுருக்கட்டுக்கள்.
    - எண்கோண வடிவிலான சிகரம்.
    - முன் வாயிலில் செதுக்கல்களைக் கொண்ட எண்கோண வடிவிலான கற்றூண்கள்.
- முன் வாசலிலில் உள்ள கல்லால் ஆன கதவு நிலை கட்டையாக அமைக்கப்பட்டுள்ளது.
- கர்ப்பக்கிரக்கதினுள் சிவலிங்கம் அமைக்கப்பட்டள்ளது. (05 புள்ளிகள்)

iii) அநுராதபுர காலத்து படிமாகரவை விட பொலநறுவை காலத்து சிலைமனைகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவை செங்கல்லை ஊடகமாகக் கொண்ட கெடிகே மரபைத் தழுவியுள்ளமை இதன் சிறப்பாகும். பொலநறுவைத் தூபாராம சிலைமனை, இலங்காதிலக்க சிலைமனை, திவங்க சிலைமனை என்பன இதற்கு உதாரணங்களாகின்றன. இதில் பின்வரும் திராவிடக்கட்டடக்கலை பண்புகள் காணப்படுகிறது.

- அதன் கூரை செங்கல்லாலும் வில் வளைவு வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

agaram.lk

- தூபராமயவின் கூரை பாதுகாப்பாக இருப்பதுடன் இலங்காதிலக்க, திவங்க ஆகியவற்றின் சிலை மனைக் கூரைகள் அழிந்துள்ளன.
- தூபராமய சிலை மனைக் கூரை மிகவும் பாதுகாப்பாக இன்னமும் காணப்படுகிறது. இது பொலநறுவையிலுள்ள ஏனைய சிலை மனைகளை விடச் சிறியதாகும்.
- இக்கட்டத்தின் சுவர் ஏழு அடி தடிப்புடையது. கூரை தாங்கி நிற்பதற்காகவே இது இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.
- மூன்று சிலை மனைகளினதும் உட்புற வெளிப்புறத் தோற்றம் ஒரே கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது. கருவறை ,அந்தராளம்,வெளிவாயில் மண்டபம் ஆகிய பகுதிகளை கொண்டிருத்தல்
- வெளிப்புறச் சுவரில் விமானங்களும் செதுக்கல்களும் காணப்படுகின்றன. இவை சுண்ணாம்புச் சாந்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவை வர்ணம் தீட்டப்படும் இருந்திருக்கின்றன.
- இவை சிவ ஆலயங்களின் அமைப்பைத் தழுவியுள்ளன. அத்துடன் தென் இந்திய கட்டட நிர்மாணிப்புப் பண்புகளும் இவற்றில் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

(08 புள்ளிகள்)

**வினா 4**

i) இல்லரத்தை துறத்தல்,ஞானம் பெறல்,முதலாவது தர்ம உபதேசம்,பரிநிர்வாணம் (02 புள்ளிகள்)

- பாருத் தூபியை சுற்றி 7அடி வீதம் உயரமுடைய 80 கற்றூண்களைக் கொண்ட வேலியொன்று இருந்துள்ளது. இது 300 அடி சுற்றளவைக் கொண்டது. இதன் ஒரு பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது.
- வேலித் தூண்கள் கிடையாகவும் செங்குத்தாகவும் அமைந்துள்ளன.
- உச்சியிலுள்ள கற்றகடு உச்சித்தூண் எனப்படும்.
- தூண்களில் யக்'ா ஆண் உருவங்களும் யக்ீ பெண் உருவங்களும் வேலியின் வட்ட வடிவமான சட்டகங்களுக்குள் ஜாதகக் கதைகளும், புத்தரின் வாழ்க்கை நிகழ்வுகளும் பொழியப்பட்டுள்ளன.
- கல்வெட்டுக்களுடனான கதைகள் 10 அளவிலும் கல்வெட்டுகளின்றிய கதைகள் 20 அளவிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (05 புள்ளிகள்)

ii) புத்த பெருமானின் வாழ்க்கை சரிதை சாஞ்சி தோரணத்தில் செதுக்கப்பட்டுள்ளது. ஆனால் புத்தரை உருவமாக காட்டப்படவில்லை இருப்பினும் புத்தருக்கு பதிலாக பாதம், போதி மரம், குடை, சிம்மாசனம், தாமரை போன்ற குறியீட்டினால் பயன்படுத்தி இலகுவாக காதலைச் சிற்பமாக வடித்துள்ளனர். (இதற்கு உதாரணம் குறிப்பிட வேண்டும்)

(08 புள்ளிகள்)

agaram.lk

**வினா 5**

i) பாரத மாதா, அசோக அரசனின் ராணியும் அரச மரமும். (02 புள்ளிகள்)

ii) ஐரோப்பிய தழுவல்களை விடுத்து அஜந்தா, எல்லோரா மொகலாய, இராஜபுத்தானிய கலை மரபுகளையும், சீன, யப்பான் போன்ற மரபுகளையும் தழுவி இந்திய ஓவியங்கள் படைத்த காலம் இந்திய மறுமலர்ச்சி எனப்படும்.

(05 புள்ளிகள்)

iii) நந்தலா பேகனின் நஞ்சுண்ட சிவன் ஓவியம் பற்றி குறிப்பிட வேண்டும். (08 புள்ளிகள்)

**வினா 6**

i) பியற்றா ,மோசஸ் ,டேவிற், இறக்கும் அடிமை (02 புள்ளிகள்)

ii) பர்னாஸ்சோ

- இது ஒரு வகை காவியத்தைப் பிரதிபலிக்கின்றது. வெவ்வேறு காவியத்துடன் தொடர்புபட்ட பல கதாபாத்திரங்கள் மலையுச்சியில் கூடியுள்ளமை இங்கு, ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது.
- பர்னாஸஸ் எனும் கற்பனை மலையுச்சியின் மத்தியில் அப்பலோ தேவாலய கருவியை இசைப்பதுடன் அவரைச் சூழ உள்ளவர்கள் செவிமடுப் காணப்படுகின்றனர்.
- இடப்பக்கத்தில் கடும் நீல நிறத்து ஆடையுடன் காணப்படும் உரு "லௌகுத்" எனும் துறவியினுடையது.
- இது கிரேக்க உரோம கலைப் பண்புகளை மறுமலர்ச்சிக்கால படைப்புகளில் உபயோகித்துள்ளமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

(05 புள்ளிகள்)

iii) கடைசி இராப்போசனம் பற்றி விமர்சித்திருத்தல் வேண்டும் (08 புள்ளிகள்)

**வினா 7**

i) கருமைநிற உருக்களையுடைய மட்பாண்டங்கள், செம்மை நிற உருக்களையுடைய மட்பாண்டங்கள்,
(02 புள்ளிகள்)

ii)
- ஆரம்ப காலத்தில் கிரேக்கச் சிலைகளில் எகிப்திய செல்வாக்குக் காணப்பட்டது.
- ஆரம்பகாலத்தில் உருவாக்கப்பட்ட கிரேக்க சிற்பங்களிடையே அப்பலோ, கோரே,கொறி டெட்டலிக், டெட்டலிஸ், மெற்றோ பொலிட்டன் நூதனசாலையில் உள்ள இளைஞனின் வடிவம் என்பன முக்கியமானதாகும்.
- இவற்றில் கேத்திர கணிதக் கோட்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளன.
- சாலனம், அசைவு, லயம் என்பன பின்பற்றப்படவில்லை.
- நேரான விறைப்புத் தன்மை பொருந்திய மெய்நிலைகள் கொண்டவை.
- தொங்கவிடப்பட்டவாறும், உடலுடனும் ஒட்டியவாறு கைகள் காணப்படும்.
- அகன்ற தோள்பட்டை காணப்படும்.
- ஒருகால் முன்னகர்த்தியவாறு இருக்கும் இதற்கு நூதனசாலையில் காணப்படும் இளைஞனின் வடிவம் சிறந்த உதாரணமாகும்.
  மேற்படி இலட்சணங்கள் பண்புகள் என்பன ஆரம்பகால கிரேக்க சிலைகளில் காணக்கூடிய பண்புகளாகும். (05 புள்ளிகள்)

iii) கிரேக்கக் கலைஞர்கள் மேன்மைக் காலத்தில் சிலையமைப்பில் தேர்ச்சி நிலையை அடைந்த போதிலும் அவர்களின் சிலைகள் ஹெலனிஸ்டிக் காலத்திலேயே மிக வெளிப்படையாகத் தோன்றின. காரணம் மேன்மைக்கால சிலைகளிலும் பார்க்க ஹெலனிஸ்டியுக சிலைகளில் உணர்வு வெளிப்பாடுகள் அதிகமாகக் காணப்படும்.

உதாரணமாக “லவகூனும்” அவனது புதவல்வர்களும். (08 புள்ளிகள்)

agaram.lk